



ஓலை 111| ஓசை 234| மார்ச் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை




அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது

## பொருள்

இவருக்கு உதவினால் பிறகு நமக்கு இது கிடைக்கும் என்று எண்ணாதவராய் ஒருவர் செய்த உதவியின் அன்பை ஆய்ந்து பார்த்தால், அவ்வுதவியின் நன்மை கடலைவிடப் பெரியது ஆகும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## சான்றோ ரென்கை யீன்றோட் கழகு!

## குறட் பாக்கள் - அந்தாதி

விண்ணி லிருந்தே விழும்மழலை யாம்மழை
மண்ணில்தான் மாறிடும் மாண்பு.

மாண்புடன் தோன்றும் மழலையாவும் கற்றுணர்ந்தும்
மாண்பின்றேல் பெற்றோர் பொறுப்பு.

பொறுப்பாய் வளர்ந்தே புகழில் திளைத்தால்
உறுப்பா யுதவு(ம்) உணர்.

உணர்ந்தாலே உண்ணவுத வும்,இல்லை யாயென்
றுணர்த்துமே யாவுங் கனி.

கனியிலே எட்டியாய் கைசுவையு மூறும்
கனிப்பலாவாய் காட்டுங் கணிப்பு.


கணித்தே வளர்த்திடும் கற்றுணர்ந்த சான்றோன்
அணியாய் விளங்குவான் ஆம்.

ஆமணக்கும் நெய்யாக ஆன்றோர் மணக்கவே
நாமணக்கும் வாய்ச்சொல் நடப்பு.

நடப்பையெல்லாம் நன்குணர்த்தி நல்சான்றோ னாக்கல்
தடம்மாறா பெற்றோர் தவிப்பு.

தவிப்புடன் சீருடனே சான்றோனாய்ப் பெற்றோர்
புவியழகாய்க் காத்தல் புரி.

புரிந்தே வளர்ந்தபிள்ளை போற்றிடும் சான்றோன்;
அரியதொரு ஈன்றோர்க் கழகு.







**இலக்கணக் குறிப்பு:**

இரண்டடிக் கொண்ட ஒரு பாடல். முதலடியில் நான்கு சீர்கள் வந்து, இரண்டாம் அடியில் மூன்று சீர்கள் வந்து மூன்றாம் சீர் நாள். மலர், காசு, பிறப்பு என்ற வாய்பாட்டில் முடியும். இரண்டடியும் ஓரெதுகை பெற்று, முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை அமையும். இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் கலந்து வரும். குற்றியலுகரம் நோக்க வேண்டும்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

# நிழல்

## இன்னிசை பஃறொடை வெண்பா

மண்ணில் விழுமே
மனிதன் கருநிழல்

அன்பு நிறைந்தோர்
அகலாது நிற்பரே

இன்னல் வருமுன்
இதமாய் உதவியே

கண்ணை இமையது
காக்கும் நிலைமைத்தாய்

நின்ற நிழலாய்
நிலைப்பரே காலடியில்

கன்றித் தருவர் களிப்பு.



கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

ஒற்றைக் கொம்பு
எழுதிவிட்டு நிமிர்கிறதோ?
முற்றத்தில் தென்னை



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# உத்தமம்

அவசர அவசரமாய்
என் அறைக்குள் நுழைந்தாய்
நுழைந்த வேகத்தில்
ஒரு பாத்திரத்தில்
என்னை நிரப்புகிறாய்.

என் பொறுமையை
நிரூபிக்கவும்
நான் நானாக ஆகவும்
நீ வரும்வரை
நான் அமைதி காப்பதே
உத்தமம்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# பேசாத மொழி!

அரை மணி நேரத்தை கடந்தும்
களிப்பை மட்டும் கொண்ட
உரையாடலில் பிரிவு என்ற
சொல்லாடல் நுழைய கூட இடமில்லை!

இன்னும் கொஞ்ச நேரம் என்ற
பார்வை மட்டும் பத்து நாட்கள்
பேசிக்கொண்டே இருந்தாலும் தீராது!

அடுத்து பேச கரு ஏதும் இல்லை என்றாலும்
'போறியா' என்று அவளின் அனத்தல் மொழி
மட்டும் மாறாது!

யான் அவளை காண
அவள் என்ன எண்ணுவாளோ
கண்ணிலே களிப்புக் கொண்டு
இவை விலகாது சிரித்திடுவாள் இதழின் ஊடே!

நாள் கடந்தாலும் பேசிடுவோம் என்போம்
எங்களின் ஒரு மணி நேர
பேச்சில் ஒரு வார்த்தை கூட வாரா!

எங்கள் கண்கள் மட்டுமே
பேசிக் கொள்ளும்! - களிப்பை
மட்டுமே ஊட்டிக் கொள்ளும்!

ஏன் வந்தது சிரிப்பு என்றறியாது
ஆனால் சிரிப்பு மட்டும் வரும்

என்றும் மறக்க முடியாத
எந்தன் சிரிப்பழகி அவள்!



கவிஞர் க. நிவேதா, பவித்திரம் (கரூர்)

4. குணமாலையார் இலம்பகம் .

அந்தணர்கட்குச் சமைத்த சோற்றின் திரள்
வந்தொரு நாய் கவ்வியதைக் கண்டனர்
சிந்தையில் பட்டது,"எச்சில் சோறாயிற்று"
அந்த நாயைக் கொல்ல விரட்டினர்.

ஆளுக்கு ஆள் தடியால் தாக்கினர்
அடிமேல் அடிபட்டு அலறியது நாய்
மடியும் தருவாயில் கண்ணீர் விட்டது
படித்த ஐந்தெழுத்து மந்திரத்தை கூறினான்

தன்னுருவம் நீங்கி தேவஉரு கொண்டான்
மின்னலென திரும்பி வந்தான் பூவுலகம்
தன்னடக்கத்தோடு சீவகனை வணங்கினான்
"என் சாபம் உங்களால் நீங்கப் பெற்றேன்"

"என் பெயர் சுதஞ்சணன் என்பது
நான் இயக்கர் தலைவனாக இருக்கிறேன்,
நான் வாழும் இடம் சங்கவெண்மலை
என் நகரத்தின் பெயர் சந்திரோதயம்"

"உன்னைநிழலாக நீங்காமல் இருப்பேன்
என்னை நம்பு உற்ற தோழனாவேன்
என்ன நேர்ந்தாலும் தோள் கொடுப்பேன்
நினக்கு எங்கடன் பணிசெய்து கிடப்பதே"

கூறியதைக் கேட்டு நண்பனைத் தழுவினான்
ஆறுதலாக சொல்லியவை அன்பு வாரத்தைகள்
"மறக்காமல் நான் சொல்வதையும் கேள்
தற்சமயம் இடையூறு ஏதுமில்லை எனக்கு"

கேட்ட சுதஞ்சணன் விடை பெற்றான்
"திட்டமாக என்னை நினைத்தால் போதும்
அடுத்த நொடியே உன்னுடன் இருப்பேன்"
சட்டென விண்ணில் எழுந்து மறைந்தான்



சீவகனும் தோழர்களும் பொய்கை வந்தனர்
காவலுடன் பல்லக்கில் வந்தாள் குணமாலை
காவலைமீறி வீதியில் பாய்ந்தது அசனிவேகம்
பாவப்பட்ட மக்கள் தெறித்து ஓடினர்

மதங்கொண்ட பட்டத்து யானை
எதிர்த்து நிற்க யாரும் இல்லை
உதிரிப் பூக்களாக சிதறி நடுங்கினர்
எதிரில் குணமாலை தனித்து நின்றாள் .

கண்டான் சீவகன் பாய்ந்தான் யானைமேல்
கண்ணிமைக்கும் நேரத்தில் அடக்கினான்.
கண்ட அவள் சீவகன்மேல் மையலூற்றாள்
கண்ணுக்குள் சீவகன் நிறைந்து நின்றான்

குணமாலையார் இலம்பகம் தொடரும்...

தொடரும்...

கவிஞர் ந. திருக்கொழு

# ஆடு புலி ஆட்டம்

தினம் தினம்தான் ஆடுகிறேன்;
இந்த ஆட்டம்
புலி உறங்கும் நேரம்
எதிர் நோக்கி இருப்பேன்;
அந்நேரம் பார்த்து அவருடன்
ஒரிரு வார்த்தையாடல் கிசுகிசுப்பாய்.
ஒரிரு குறுஞ்செய்தி; அவ்வளவே
தயாராய் இரு மாலை
ஒரு கண் சாடை
இரவு
காலாற நடை:
மனமார பேச்சு:

இத்தனை நேரம், எங்கே?
கேள்விக்கு பதில்;
நொடியில் அவர் தந்தார்;
மருத்துவர் வீடு வரை.

கேட் பாருக்கு ஒரு பதில்
சரியான பதில் மட்டும்!
உளமார ஒரு பொய்தான்;
வேறென்ன?

மனதில் பூத்தது மத்தாப்பு
கண்ணில் வானத்தின் நீலம்

நோயாளி பெண்ணை தெரியாமல் கட்டியாச்சு
நாளும் செலவுதான்; போ!
புலியின் ஒரு நொடிப்பு!

ஏழை வீட்டுப் பெண்
கூட்டுக் குடும்பத்தில் வாழ்க்கைப்பட..
தினம் ஆடு புலி ஆட்டம்தான்!
வாடிக்கையான விளையாட்டு!

புலியைக் கட்ட ஏலாது!
பலியாகாமல் பார்!
வேடிக்கை தான்!
வினோதம் தான்!




கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# மனமென்னும் மாயக்கண்ணாடி!

எதையெல்லாம் எண்ணங்கள் தேடி ஓடுகிறதோ..
அங்கெல்லாம் வெறுமையான
அட்சய பாத்திரத்தை தூக்கிக் கொண்டு
ஓடுகிறது இந்த மாயக்கண்ணாடி.

எதைத்தேடுகிறோம் எனப்புரியாமல்
அங்குமிங்கும் நாக்கைத் தொங்க போட்டுக்கொண்டு..
இரைக்காக ஓடிக்கொண்டிருக்கும் ஓநாயைப் போல்
வெற்றிடத்தில் ஊளையிட்டு ஊனமாய்
ஊமையாய் நிர்வாணமாய்
இன்னும் நுரைதள்ளிக்கொண்டு
ஓடும் முயலைத் துரத்திப்பிடிக்கும்
வேட்டை நாயாய் எத்தனை வேடமிடுகிறது.
தன் தேவைகளுக்காக.


மாயக்கண்ணாடியே!
தூங்கும்போதும் விழித்துக்கொண்டிருக்கிறாய்.
அதைத்தேடு.. இதைப்புசி..
என மனக்கண்ணால் கட்டளையிட்டுவிட்டு
சப்புக்கொட்டி கவண் கல் கொண்டு
குறி பார்த்து அடித்ததை
விழுங்கி விட்டு ஏப்பமிடக்காத்திருக்கிறாய்.

உன்னை யானையின் அங்குசமாய் ஆக்கிகொண்டால்
மலை யானையாய் அடிபணிந்து
நன்றி கொண்ட நாயாய்
வாலாட்டிக்கொண்டே உலவுவாய்.
இல்லையெனில் புலிவால் பிடித்த மூடனாய்
நீ போகும் திசையெல்லாம் இழுத்துப் போவாய்
மாயக்கயிற்றில் கட்டி இழுத்துக்கொண்டே.



கவிஞர் இராஜகை நிலவன், மும்பாய்

எல்லா முறுக்கு மீசைக்குள்ளும்
இருப்பது இல்லை செருக்கு
முண்டாசுக் கவிஞனின் மீசையிலும்
இருந்ததுதான் அந்த முறுக்கு



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

# குமரிஞாழல்

உப்பு காத்து பட்டு
உடைஞ்சு போன பாறை கீழே.
தேரை சத்தம் செவி எட்ட.

குமரிஞாழல் பூ மணக்க
குமரி அவள் நடை கடக்க.
குழி விட்டு நண்டு மயங்க.

பேரலையும் புரண்டு வர
பேரழகை இமை விரிக்க
புவியீர்ப்பு விசை திசை திருப்ப

இடை அழகை வர்ணிக்க
எதுகை மோனை இடை மறைக்க
எப்படி கவி எழுதுவேன் கண்ணம்மா!?



கவிஞர் சு. பிரகாச மேரி, உடப்பன் குளம் (தென்காசி மாவட்டம்)

# தலையெழுத்து மாறுமா?

அருளில்லா அகம் காய்ந்துவிடும்.
அன்பில்லா உறவு முறிந்துபோகும்.
ஆக்கமில்லா ஆற்றல் அற்றுப்போகும்.
தெளிவில்லா கருத்தியல் உதிரும்

எல்லார்க்கும் பெய்த மழை
எம் தாகம் தீர்க்கவில்லை.
விடுதலை தந்த விடியல்
வட கிழக்கில் அரும்பவில்லை
முற்றுப் பெறா வன்மம்
முகவரி தேடும் மக்கள்
நிலமிழந்த இனத்தின்
தலையெழுத்து மாறுமா?



கவிஞர் செ. தமிழ் பேயன், தமிழ் நாடு

# இயற்கையின் பொக்கிஷமாய்

கஜராஜனாய், காட்டை ஆளும் பெருமை நீயாய்
தும்பிக்கையோய், வலிமை தந்து உலகை மெய்ப்போய்
வாரணமீய், நடையில் ஒளிரும் அழகு தோய்ந்தாய்
மதயானையாய், மலையைப் போல உயர்ந்து நீயாய்
ஐராவதமோய், தேவர் பாடும் புகழைச் சேர்ப்போய்
களிறு நீயாய், கருணை கொண்டு மனதைத் தீய்ந்தாய்
கரியுருவோய், காலால் பூமி அதிர்வைத் தாங்கோய்
அஞ்சனமீய், குழந்தை உள்ளம் மகிழ்ச்சி பூப்பாய்
பாகனின் தோழாய், பாசம் தந்து உறவை வளர்ப்பாய்
இயற்கையின் பொக்கிஷமாய், என்றும் நிலைத்து நிற்பாய்!



கவிஞர் ம. ஹரிஷ், பாலூர் (செங்கல்பட்டு மாவட்டம்)

# சுழலும் வாழ்க்கை

சுழல்வது வாழ்க்கை மட்டுமல்ல
வையக இயல்புகளின் மொத்தங்களும்
சுழன்றே செல்கின்றது
இரவும் பகலும் கதிரவனும் சந்திரனும்
ஏன் பிறப்பும் இறப்பும்
சுழன்றே வாழ்கைப் போக்கினைக் கற்பிக்கின்றது

எதற்கும் நிலையான நிலை பெறுதல்
எங்கும் இல்லை என்பதே நியதிகளின் இறுதி முடிவு
இருப்பிடம் தேடிக்கொண்டு நிலைக்க
அலைவது ஒரு வகை மமதை மட்டுமே
அங்கும் நித்தியத்தைக் காண்பது கானல்தான்.

ஒரு நிமிடப் புன்னகைக்கும்
கணக்கீடு இருக்கத்தான் செய்கிறது
இதழ் விரிக்கும் மலருக்கும்
கால அவகாசம் கொடுக்கப்பட்டுத்தான்
அடுத்த மலர்கைக்கு இடம் விட்டு
மெல்ல உதிர்ந்து விடைபெறுகிறது

மனித நாட்களுக்குள் சில கற்பனைகள் தான்
சுழற்சிகள் மறந்து அடம்பிடித்துக் கொண்டே
ஆணவம் செய்கிறது
அந்தப் பெருமிதங்களுக்கு
உலக வாழ்வின் உண்மைப் பெறுமதிகள்
புரியவில்லை போலும்.

சுழலும் நாட்களுக்குள் சுருங்கிக் கொண்டு
வேடிக்கை பார்க்கிறது குறுகிய உள்ளங்கள்.
மனதைத் திறந்து சிறகுகளை விரித்துப் பாருங்கள்
இயற்கையின் ஆழ அகலங்களையாவது!
அழகிய அமைப்பின் இரகசியங்களுக்குள்
ஓரிரு நிமிடங்களேனும் அகம் நுழைத்துப் பேசிப் பாருங்கள்
சுழலும் வாழ்க்கைக்கு இத்தனை சிறகுகளா என்று!



கவிஞர் சேஹு மொஹம்மது பௌஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ



உழைப்பின் உன்னதத்தை
உணராதவர் இருக்க முடியுமோ.

உழைப்பதென்பது
உனக்குத்தெரிந்த செயலை
உனக்காகவே முதலில்
உள்ளன்போடு செய்வதே.

உள்ளன்போடு செய்தால்
திட்டங்கள் உருவாகும்.
திட்டங்கள் உருவாகினால்
ஆற்றல் பெருகும்.

ஆற்றல் பெருகினால்
செயல்திறன் பெருகும்.
செயல்திறன் பெருகினால்
உற்பத்தி பெருகும்.

உற்பத்தி பெருகினால்
செல்வம் பெருகும்.
செல்வம் பெருகினால்
செல்வாக்கு பெருகும்.

செல்வாக்கு பெருகினால்
புகழ் பரவும்.
புகழ் பரவி,
பூமியலுள்ள எல்லா உயிரினங்களுக்கும்
உன்னால் உதவ முடியும்.

உதவ முடிந்ததை
உழைப்பின் மூலமே
உயரச்செய்வோம்.
ஊர் போற்ற வாழ்ந்து வெற்றி பெறுவோம்!

கவிஞர் பானு அப்துல்லா

# தன்முனைக் கவிதைகள்

நான் திருடியதை
நீ எப்படிச் சம்மதித்தாய்!
தேடாமல் இருக்கிறாய்
இன்னும் உன் இதயத்தை!
**

உனது தேசத்தில்
நீ தான் மகாராணி!
எப்போதும் என்னை
அடிமையாக்கிக் கொள்!
**

நாம் இருவர் தான்
காதல் வரும் வரை!
நாம் ஒருவராக
எத்தனை தடைகள்?
**

நீ உயர்ந்து நிற்கிறாய்
நான் மகிழ்கிறேன்!
உன்னால் முடியும் என்றால்
என்னால் ஏன் முடியாது?
**

நமது வாழ்க்கைப் பயணத்தில்
எல்லோரும் இணையலாம்!
வளமான வாழ்க்கையே
எல்லோருக்கும் தேவை!
**

உடலுக்குள் எத்தனையோ
உன்னத உறுப்புகள் !
நமது செயல்களால் தான்
அவை பாதுகாக்கப்படும்!



கவிஞர் சோ. ஸ்ரீதரன், இலங்கை

# அதிசயங்கள் அற்புதங்கள்

உள்ளம் கொள்ளை போகும் உலக அதிசயம் ஆயிரம்
*அதிசயங்கள் அற்புதங்கள்* ஆயிரம் உண்டு பூமியில்

இயற்கையின் சக்தியால் தோன்றிற்ற அதிசயங்கள்
ஆறுகள் மலைகள் நதிகள் என நீர் வழி தடங்களும்
சிங்கம் புலி யானை என அதி துஷ்ட மிருகங்களும்
பூனை நாய் குதிரை மாடுகள் ஆடுகள் என
மனிதருடன் பயணிக்கும் அற்புத உயிரினங்கள்
அதிசயத்தின் ஆச்சரியங்கள்.

மனிதனின் சக்தியால் மாபெரும் சாதனைகள்
*நினைக்க முடியாத அற்புதங்கள்* ஆயிரம் இங்குண்டு
கரிகால் சோழனின் கல்லணை.. சோழர்களின் ஆலயங்கள்
கட்டுமானங்கள் நிர்மாணிக்கப்பட்ட நகரங்கள் என
மறைக்க வைக்கும் அதிசயங்கள்.

கலை கலாச்சாரம் ஜோதிடம் ஆன்மீகம் கட்டிடக்கலை என
மனிதன் திறமைக்கு ஈடு இணை உலகில் இல்லை
அறிஞர்கள் கலைஞர்கள் ஆயிரம் இருந்தாலும்
வான் முட்டும் விஞ்ஞானம் பூவுலகில் ஆயிரம்.

இதுபோல அதிசயங்கள் நாட்டுக்கு நாடு ஏராளம்
கற்காலம் தொட்டு இக்காலம் வரை அபரீத வளர்ச்சிகள்
நாகரிகத்தின் உச்சங்கள் உலகத்தின் அதிசயங்கள்
மனம் கொள்ளை போகும் அற்புதங்கள்.

நாட்டுக்கு நாடு அளவிட முடியாத அதிசயம் ஆயிரம் இங்குண்டு
பூமியில் அத்தனையும் ரசிக்கலாம் ருசிக்கலாம்
ஆனாலும் காணாதே இந்த ஒரு ஜென்மம் தான்.

உள்ளம் கொள்ளை போகும் அதிசயங்கள் விஞ்ஞான வளர்ச்சிகள்
உலகமே உள்ளங்கையில் என பரிணாம வளர்ச்சிகள் ஆயிரம் உண்டு
உலகில் அத்தனையும் ரசிக்க காணாதே இந்த ஜென்மம்.



கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம்

# மருந்து

## அதிகாரம் : 95




உணவும் உணர்வும்
உடற்கூறுபாட்டிலும் கூடினும்.
குறைந்திடினும் கபவாதப்பித்த
நோய்கள் வந்துசேரும்.

முன்னுண்ட ஊண்செரித்ததை
தன்னில்தெளிந்து பின்னுணவு.
உண்டிட்டால் உடம்பிற்கு
மருந்தேதும் வேண்டாவாம்.

முன்னுண்ட ஊண்முழுதும்
செரித்தபின் உண்டிடலொன்றே.
உடம்பை நெடுங்காலம்
காப்பாற்றும் ஒரேவழியாம்.

ஊண்செரிப்புத் தன்மையறிந்து
மாறுபாடில்லா ஊணுமறிந்து.
நன்றாகப் பசித்துப்
பின்னுண்ணல் நலமாம்.

மாறுபாடில்லா ஊணை
அளவுமாறாது உண்டிடின்.
ஒருயிர் உடல்வாழ
பிணிகளால் இடையூறில்லையாம்.

நிறையளவிலுங் கொஞ்சங்குறைய
உண்போனிடம் இன்பமும்.
நிறைக்குமதிகமாய் உண்போனிடம்
நோயும் நீங்காதுநிலைக்கும்.

பசித்தீயின் அளவிற்கன்றி
காலநேரங்கருதாது ஒருவன்.
உண்போனாயிருந்திடின் அவனுக்கு
எல்லையில்லா நோய்வளரும்.


அறிகுறிகண்டு நோயறிந்து
அதன்காரணந் தெளிந்ததை.
அகற்றும் வழியுமறிந்து
மருத்துவம் செய்தல்நலம்.

மருத்துவமறிந்தோன் நோயுற்றோனின்
நோய்த்தன்மை காலத்தியல்புடன்.
வயதுங்கருதிய பின்னரே
மருத்துவம் செய்தல்நலம்.

நோயுற்றோன் மருத்துவன்
மருந்துவகையுடன் அருகிருந்து.
மருந்தளிப்போன் எனநான்காய்
பிரிந்ததே மருத்துவமுறையாம்.


கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

வாழ்க தமிழோடு
வாழ்த்துப்பா பாடிட
வாழ்வியலோடு சேர்ந்திட
வானமும் மகிழ்ந்திட
வாசம் வீசிட
வாளோடு காத்திட
வாயில்களில் ஒலித்திட
வாத்தியங்கள் முழங்கிட
வாசித்தல் மேம்பட
வாணியும் இரசித்திட
வாலியும் எழுதிட
வாழிய செந்தமிழே




கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# எங்கே போகிறது இந்த வாழ்க்கை?



எண்ணங்கள் சிறகடிக்கும்
ஆசைகள் அலையாகும்
இணையத்தில் மூழ்கினோம்
பந்தபாசம் மறந்தோம்
இரவெல்லாம் விழித்திருந்து
அதிகாலையில் நித்திரையே
உதயத்தை கண்டதில்லை
பகலவனும் சுட்டெரிக்கிறான்

கடமையை மறந்தே
காலத்தை கடத்தினோம்
அவசர உலகினில்
அன்பாய் பேசியதில்லை
எதிலும் வெறுப்புதான்
ஏக்கத்தில் தவிப்புதான்
ஓடோடி உழைத்தும்
கையில் ஒன்றுமில்லை

ஆடம்பரத்தில் வீழ்ந்து
அனைத்தையும் இழக்கிறோம்
தவணை கட்டியே
தவிக்கிறோம் இன்று
துளிர்விடும் ஆசைகள்
அனைத்தும் பட்டுப்போகிறதே
நிம்மதியில்லாத பெருமூச்சும்
அனலாய் சுடுகிறதே

எத்தனை இன்னல்கள் அத்தனையும்
கண்முன்னே
நிழலாடும் நினைவுகள்
நீர்த்துப் போகிறதே
தேவைக்கு மீறிய
செலவால் துன்பமே
துயரம் துரத்திட
மனதில் உளைச்சலே

எங்கே போகிறது இந்த வாழ்க்கை?
வசந்தமும் வந்திடுமா
வாழ்வில் நிலைத்திடுமா
அல்லல்கள் பனித்துளியாய் கரைந்தே
நலம் யாவும் வந்திடட்டுமே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# வறுமையின் முகம்

வானம் அழும் நேரத்தில்
எங்கள் வயிற்றும் அழுகிறது...என்
தாயின் கரம் நீண்டது
ஒரு தகரக்குவளையில்
மழை நீர் வேண்டி.

ஒதுங்கிச்சுருள வீடு இல்லாமல்,
நசுங்கிய குடைக்குள்
தஞ்சம் புகுந்திருக்கிறோம்.

தாய்- ஒரு தேர் இல்லா தேவதை,
வறுமையின் கால்கள் கட்டப்பட்டும்
மகிழ்ச்சியாய் எங்களை அணைக்கிறாள்.

நெருப்பில்லா அடுப்புகள்
வெயில் வரும்வரை சிரிக்க,
நமக்குப் பசியும் பொறுமையே.

தூங்கும் முன் நான் சொன்னேன்.
"மழை ஒரு நாள் முடிந்துவிடும்.!
எங்கள் வறுமை
எப்போதம்மா விடியுமென்று?"

எதுவும் நிரந்தரமில்லை கண்ணே!
விதியுடன் போராடுவோம்!
மரம் வைத்தவன்
தண்ணீரூற்றாமலா
போய்விடுவான்?--என்றணைத்தாள்




கவிஞர் ரிஷாதா ரஷீத், அக்குறணை

வறுமையின் கொடுமைக்கு தலை
சாய்த்து குடிசை வீடுகளில்
ஏழ்மையின் நாற்றத்தில்

மரணம் வரை வறுமையை தின்று
விடியும் பொழுதுகள் எல்லாம்
நம்முடைய பொழுதுகள்

என்ற நிறைவேறாத கனவுகளின்
கல்லறையில் அநாதை பிணங்களாய்
நடுத்தர வர்க்கம்

பிரமாண்டங்களின் நிழலில் இருளின்
ஆடையாய் இவர்கள் வாழ்க்கை
பயணம்

ஏழ்மையின் போராட்டங்கள் என்றுமே
எந்தவொரு அரசாங்கத்தாலும்
தீர்க்க முடியாத

வாக்கு பிச்சைகளின் அசிங்கமான
அரசியலாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# நாணம்



பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்
சிறப்பைத் தருவது மாந்தர்க்கு நாணமே
நாணமும் நாணயமும் நமக்கு உடைமை
நீங்காமல் காத்தலே நமது கடமை
அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு
உச்சமாய் பெண்ணுக்கு தந்திடுமே உயிர்ப்பு
ஆண்மைக்கும் பொருந்தும் ஞானத்தோடு நாணமே
பிறர் தன்னைப் புகழுங்கால் நாணமே
தனிச் சிறப்பாக நமக்குள் வேணுமே
உலகப் பொதுமறையில் நாணுடைமை அதிகாரம்
பாண்டியன் மானத்தால் உயிர்நீத்தல் சிலப்பதிகாரம்
சான்றோர்க்கு நாணமே சிறந்த ஆபரணம்
வேண்டாமை நிகழின் அத்தருணமே மரணம்
பழிக்கு அஞ்சுபவரே நாணத்தின் உறைவிடம்
பெண்ணின் கண்களே நாணத்திற்கு மறைவிடம்
உயர்ந்தோர் தமக்கு காவலாகக் கொள்வர்
ஒயிலான பெண்கள் நாணத்தால் வெல்வர்
ஒன்னுமே வேணாமே நாணமே போதுமே
பெண்மைக்கு அழகு அதுவே ஆகிடுமே
நாணமும் நாநயமும் அழகு சேர்க்கும்
ஆணவம் இன்றி வியந்து நோக்கும்
ஆண்மையைக் கண்டவுடன் பெண்மையில் புகும்
காதலர் நோக்குங்கால் நிலம் நோக்கும்
நோக்காக்கால் காதலனைத் தான்நோக்கி மெல்ல நகும்

கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# எப்படி?

நான் உன்னை நினைத்திருப்பதும்
நீ என்னையே நினைக்க
மறந்து போவதையும் பற்றிய
கலந்துரையாடல் ஒன்றை நிகழ்த்த வேண்டும்.

நீ எப்படி அப்படியொரு மறதிக்குள்
என்னை போட்டு புதைத்து விடுகிறாயென
நான் அறியனும்.

உன்னை மறந்து நானும் நானாகிய உணர்வில் திளைத்திட
வழி ஒன்றை நானும் கண்டுக்கொள்ள வேண்டும்.

பொதுப்படையாய் நீ உழவுகிறாய்
நானோ மென்று விழுங்க தெரியாதவளாய்
உன்னையே மட்டும் நினைத்தே கிடக்கும்
ஓரங்கியாய் ஆனதேன்?

இத்தனைக்கும் நீ என்னை
கண்டுக்கொண்டதைப்போல தெரியவே இல்லையே.
நான் மட்டும் ஏன் உன்னில் இத்தனை நேசத்தை வைத்தேன்
பொய்த்திரை விலகி மெய்திரை உன்னில் உணர்ந்ததா?
என் மனம்.


அகழ்ந்திடதான் வேண்டும்
உன் மீதான என் பிரியத்தை
எப்படி என்று தான் தெரியாமல்
நானும் உளன்றுகொள்கிறேன்?



கவிஞர் சுஹைனாஸ் பேகம், முதலைப்பாளி (புத்தளம்)

# ஆல மரம்

ஆற்றங்கரை ஓரத்தில்
அடர்ந்த ஆல மரம்!
பள்ளி நினைவுகளில்
எந்தன் ஆழ் மனம்!



ஆலமர நிழலடியில்
அழகு கருப்பண சாமி!
பரவசத்தில் திளைக்கும்
அவன் பாதத்தின் பூமி!

சித்திரை வெயிலிலும்
சிதறாத படர்ந்த நிழல்!
குளுமையில் தோற்கும்
ஆற்றின் ஈர மணல்!

மைனாக் குருவிகளின்
மதிய நேர விவாதம்!
என்றும் குறைந்ததில்லை
அந்த சுகமான சத்தம்!

ஊஞ்சலாக தாலாட்டும்
ஆல மர விழுதுகள்!
விளையாடியே தீர்ந்தன
பகல் நேர பொழுதுகள்!

அழையா விருந்தாளியாக
கடைசி காலத்தின் முதுமை!
நவீன ஆயுதங்களுடன்
பேராசை மனிதனின் கயமை!

பூமியின் சீற்றங்கள்
இயற்கையின் காலக் கெடு
மரங்களின் அழிப்பு
மனிதனின் சாபக் கேடு!

இறைவனாக மனிதனும்
உயிர் தர முடியும்!
விழுதுகளின் கால்களால்
ஆலம் மீண்டும் பிறக்கும்!

பறவைகளின் எச்சங்களால்
பெருகட்டும் பூமியின் வனம்!
இயற்கையின் உண்மையை
உணரட்டும் மனித மனம்.

கவிஞர் அனில் நிலவன், கொசவபட்டி (திண்டுக்கல்)

# வெண்ணிலவு சாரல்

துள்ளத் துடிக்கும்
அன்பின் வாசம்
வெண்மணல் பரப்பில்
வேதனையைக் கூட்டிட

வாழ்த்தை மறந்த
ஒற்றை நடுகல்
வற்றாத பாலையில்
இன்னுயிர் வாடிட

துணையென இருந்த
ஒற்றைச் சருகும்
காற்றின் பிடியில்
கவனம் சிதறிட

வேர்த்துக் கொட்டிய
மொட்டை மரமாய்
தனிமையின் பிடியில்
வெந்து நோகிறேன்

உள்ளம் கசக்கி
உணர்வைக் கொன்று
நெருப்பைக் கக்கிடும்
வெண்ணிலவு சாரலாய்



கவிஞர் நிவேதிதா பொன்னுச்சாமி

# மாற்றம்

உண்மையில்
எதுவும்
முற்றிலுமாக
மாறி விடுவதில்லை
நினைவுகள் இருக்கும் வரை,
நாம் தான்
எண்ணிக் கொள்கிறோம்
எல்லாம் மாறிவிட்டதென்று.



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# குருவின் மகிமை

மாதா, பிதா , குரு , தெய்வம்.
ஒரு குழந்தைக்கு
தாய் தந்தை யார் என்று காட்டுகிறாள்.
தந்தை நல்ல குருவை காட்டுகிறார்.
குருவோ தெய்வத்தைக் காட்டி அருள்கிறார்.
குருவே நம் வாழ்வின் சிறந்த வழிகாட்டியாகவும்,
வாழ்வின் முன்னேற்ற பாதைக்கு
அழைத்துச் செல்லும் குருவாகவும் விளங்குகிறார்.
கற்களாகவும், முட்களாகவும் மனித வாழ்வில்
மண்டி கிடக்கும் புதர்களைக் களைந்து
பூஞ்சோலைகளாகவும், நந்தவனமாகவும்
மாற்றும் வல்லமை நம் குருமார்களுக்குண்டாம்
சோதனையை சாதனையாய் மாற்றுவது குருமார்களே!
குருவின் வாக்கை சிறமேற்போம்
அவரின் பாதையை பின்பற்றுவோம்
வாழ்வாங்கு நாமும் வாழ்ந்திடுவோம்



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# கானகத்தின் மோகராகம்

காட்டுக்குள்ளே காத்துக்கூட்டம்
பச்சையாடை தொட்டுச்செல்ல
காணங்குருவி இரண்டு காதல்
செய்யும் சத்தம் கேட்கையிலே

கேட்குதம்மா மோகராகம்
முள்ளிருக்கும் மரக்கிளையில்
அசைந்தாடும் பூங்குயிலே
யார் வரவை தேடுகிறாய்

தேடலின்றி வாழ்க்கையில்லை
செவ்வானம் குழையுதடி
நெல்மணியின் வாசத்திலே
ஆசை மச்சான் வியர்வைதுளி

துளியொன்று நெற்றியிலே
மெல்லிசை வார்க்கையிலே
வானம் விட்ட தூதொன்று
யாருக்கடி கண்மணியே

மணியான முத்தாரம்
மார்பிலாடும் பூந்தளிரே
யாரடிச்சா பொன்மணியே
அடிச்சாரச் சொல்லிவிடு

சொல்லி சென்ற சேதியன்னவோ
சொல்லிவிடு என்னவளே
நேற்று நடந்த கதை
நித்திரையை பறித்ததடி.



பறிக்காத அரும்புகள் பாசமுடன்
வாசம் கட்டி இழுத்து வைத்துப் பேசுகின்ற
புன்னகை பெட்டகமே

பெட்டகம் திறக்குதே பெரும்திரள்
பேரதிசயத்தில்
மலர்ந்த விழிகள் மலர்ந்து
மணக்குதே மனதிலே

மனதிலே ஒரு ராகம்
வந்தாடிப் போகுதே
கிறக்கத்திலே கீழ்வானம்
கானகத்தில் புதையுதே

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)




அக்காலத்தே உருவான
அருந்தமிழ் இலக்கியம்
முக்காலத்துக்கும் பொருந்தும்
மூலிகை கருத்துகள்
எக்காலத்தும் நின்றிடும்
எல்லோருக்குமான நூலிது

அப்பாலுக்கு அப்பால்
அயல்நாட்டவரால் விரும்பப்பட்டது
முப்பாலாய் கொடுத்து
முத்தமிழைப் போற்றினார்
ஒப்பில்லா நூலாய்
திருக்குறள் படைத்தார்

வள்ளுவப் பெருந்தகையின்
வளமையான படைப்பு
அள்ளிப் பருகிட
அமுதமாய் இருக்கும்
துள்ளியோட வைக்கும்
இளமையைத் தரும்
தள்ளி வைக்காமல்
தினமும் வாசித்திடுவீர்

அதிகாரமாய் சொன்னது
நூற்று முப்பத்துமூன்று
அதிகாரத்திற்கு பத்தென்று
ஆயிரத்து முந்நூற்றுமுப்பது
குறள்களில் தன்குரலை
கொடுத்தவர் பொய்யாமொழியர்
அறத்துப்பாலில் அறவழிக்
கருத்தை உரைத்தார்

கடவுள் வாழ்த்தோடு
வான்சிறப்பையும் நவின்றார்
பொருட்பாலில் சமூக
கருத்தை உரைத்தார்
வாழ்வியல் நெறிகளை
வகைப்படுத்தி பகிர்ந்தார்

இன்பத்துப்பாலில் காதலையும்
அதன் உணர்வுகளையும்
களவியல் கற்பியலில்
கற்கண்டாய் தந்தார்

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# ஔவை சொன்ன வழி

அர்த்தமுள்ள வாழ்க்கை வாழ
ஆசை குழந்தைகளின் இறப்பை தவிர்க்க
இல்லாதவர்களுக்கு இல்லையென்று சொல்லாமலிருக்க,
ஈகைதன்மையை செல்வந்தரிடம் கற்பிக்க
உண்மையான அன்பை கண்டுபிடிக்க
ஊழல் செய்வோரை செயலற்று போக வைக்க
எளியோரை வறியோரிடமிருந்து காப்பாற்ற
ஏமாற்றுபவரிடமிருந்து தப்பித்து கொள்ள,
ஐயமுள்ள கேள்விகளுக்கு விடை தேட
ஒவ்வொரு நாளும் வருமானத்திற்கு வழி தேட
ஓயும் வரை ஓடிக்கொண்டிருக்க உடலில் சக்தி இருக்க
ஔவை சொன்ன வழியில் அவ்வளவையும் கடைபிடிக்கவே!
அழகான வாழ்க்கையாக்கிட ஆசைபலவே!
திறமை பல வேண்டும்.



கவிஞர் நீலாசுபாஷ், ஆத்தூர்

## தொண்டரடிப் பொடியாழ்வார் - திருப்பள்ளி.எழுச்சிபத்து.

முன்னோடி.சுப்ரபாதம். என்பதுவே!எம்பெருமானைத்.
துயிலெழுப்பல்! ஆன்மீக. விழிப்பிலாத. ஆத்மாவை
துயிலெழுப்பல். ஆனதுவே!பெருமானின். கருணையை.
உணர்த்துவதாம்! கன்னியர்கள். அதிகாலை.தாமெழுந்து
தோழியரை. எழுப்பிட்டே.திருமாலின். புகழ்பாடி.
நீராடல். மகத்துவமே! பாடல்கள். இன்னிசையே!
சுப்ரபாதம். வெங்கடேச.ஐயப்பன். விநாயகர்மேல்.
என்பனவாம்!திருப்பதியில். அதிகாலை.வெங்கடேச.
சுப்ரபாதம்.மார்கழியில்.அரங்கநாத. பள்ளியெழுச்சி.
இசைக்கின்றோம்!பத்தெண்ணில். அமைந்ததுவே!இவற்றினுள்.
முன்னமைந்த.பாடல்களை. ஈண்டுசுவைப்போம்! முதற்பாட்டில்.
அதிகாலை.நிகழ்வெல்லாம்.கருத்துவிருந். தாகிடுமே!
கிழக்கினிலே சூர்யோதயம்! இருட்டழிதல்.புலர்காலை!
மணமலர்கள் தேன்சிந்தல். மேற்கினிலே. தேவர்கள்.
மன்னர்கள். குழுகூடல்! களிறுபிடி. நடைச்சத்தம்!
முரசோசை! அலையோசை. அன்னதுவே! ரங்கநாதா.
நாயகியே. விழித்தெழுக!இரண்டாவது. பாட்டினிலே.
கொடிமுல்லை.அன்னமது. சிறகுதறல்! ஆனைக்கால்.
பற்றிட்ட. முதலையைத். துணித்திட்ட. ஆதிமூலம்.
விழித்தெழுக. ஒளிசுருங்க என்றமையும்! மூன்றாவதில்.
சுடரொளிசூழ்.தாரகைகள். ஒளிசுருங்க. தடக்கையொளிர்.
திகிரிசேர்.திருவரங்க.நாயகியே.நீயெழுவாய்!
நான்காவதில். ஆயர்கள். மேதிகளின்.தளைவிடுப்பர்!
குழலிசையும்.குரலோசை. இலங்கையர். குரல்வாட்டிய.
மாமுனிதன்.வேள்விகாத்த. அயோத்திராம. திருமாலே.
விழித்தெழுக! ஐந்தாவதில். பொழில்புட்கள்.ஒலியெழுப்ப.
இருளழிந்து. ஒளிபடர்ந்தது! கடலலையொடு. அடிபணிவான்.
அமரர்கள் இலங்கையர் கோன்வழிபடு.கோயிலரங்க.
எழுந்திடுக! ஐந்தின்சுவை. காண்மகிழ்வு. அமிழ்தாக. திளைத்திடுமே!



கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# மௌன மொழி

உன் விழிகள் பேசும் மொழிக்கு
என்னால் மொழி பெயர்க்க முடியவில்லை
என் அகராதியே திணறிப் போகிறது.
வாய் மொழியை விட உன் கண்களே
என்னுடன் நன்கு உரையாடுகிறது
மொழி இல்லாமல்.

உன் மௌனத்தின் அர்த்தங்களை
என்னால் உணர முடிகிறது.
சில சமயங்களில் வார்த்தைகளால் விட
அதிகமாக பேசும் மௌனம்.
அந்த மௌனத்தில்
ஆயிரம் கதைகள் ஒளிந்திருக்கும்,
ஆயிரம் உணர்வுகள் மிதக்கும்.
உன் விழிகளின் ஈர்ப்பில்
நான் தொலைந்து போகிறேன்.

அந்த ஆழத்தில் என்னையே மறந்து போகிறேன்.
உன்னைப் புரிந்து கொள்ள
மொழி ஒரு தடையாக இருக்கக் கூடாது.
உன்னை உன் மௌனத்தில் இருந்தே
நான் அறிந்து கொள்கிறேன்,
உன் மொழியை என் இதயம் புரிந்து கொள்கிறது.
உன் பார்வையே போதும் எனக்கு
உன்னை வாசிக்க.
ஒவ்வொரு பார்வையும் ஒரு புதிய கவிதை,

ஒவ்வொரு கண்ணீர்த் துளியும் ஒரு சோக கீதம்.
சொற்களால் வர்ணிக்க முடியாத அழகு
உன் மௌனத்தில்,
அந்த அழகை ரசிக்கவே எனக்கு ஆயுள் போதாது.
நீயும் நானும் மட்டுமே இருக்கும் இந்த மௌன உலகில்,
சொற்கள் வெறும் இரைச்சல்தான்.
இந்த மௌன மொழியே நமக்குப் போதும்,
வாழ்நாள் முழுவதும் பேசவும், புரிந்து கொள்ளவும்.



கவிஞர் ரா. ரமேஷ், திருப்பூர்

# பெண்கள்

அன்பு கொண்டு அனைவரையும் கவர்ந்திடுவர்!
ஆர்வத்துடன் அனைத்து செயல்களையும் கற்றிடுவர்!
இன்புற்று இல்லமதிலே இனியவளாய் வீற்றிருப்பர்!
ஈறடிக் குழாய் வாழ்ந்திடுவர்!
உவகையுடன் உள்ளார்ந்த அன்புடன் திகழ்ந்திடுவர்!
ஊருடன் ஒத்து வாழ்ந்திடுவர் எந்நாளும்!
எண்ணும் எண்ணமது நன்றே எண்ணிடுவர்!
ஏணியாய் நின்று அனைவரையும் ஏற்றிடுவர்!
ஐயம் களைந்து துயரம் தவிர்த்திடுவர்!
ஒற்றுமை உணர்த்தி ஒன்றாய் வாழ்ந்திடுவர்!
ஓதிடுவர் நிதமும் அனைவரின் நலனுக்காக!
ஔசிதமாய் வாழ்ந்திடவே என்றும் எண்ணிடுவர்!
எஃகு போல் பலத்துடன் ஏற்றம் கண்டிடுவர்!
மனதினுள் என்றும் தன்னம்பிக்கையை விதைத்திடுவர்!
வெற்றிக் கனியை எந்நாளும் சுவைத்திடுவர்!
பெருமைமிக்க பெண்களை போற்றிக் காத்திடுவோம்!
உலக மகளிர் அனைவருக்கும் இனிய மகளிர் தின நல்வாழ்த்துகள்!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# ரமழான்



வைகறையில் முழுமதியாய்
ரமளினின்றும் பிறந்த ரமழானே
இறைத்தூதர் வர்ணித்த
ஷஹ்ரே அஜீம்,
ஷஹ்ரே முபாரக் நீயன்றோ!

ரையானின் வாசல்
உம்மத்துக்களின் வரவுக்காய்த் திறக்கின்றது
தீமைகளைச் சுட்டெரித்திடு !

பாவங்களைப்
பனிபோல் மறைத்திடு
நன்மையின் பால்
நம் இதயங்களை ஈர்த்திடு!

நற்செயல்களை ஏற்றிடு
நம் ஒட்டுமொத்த வாழ்வையும்
நல் வரவால் தூய்மைப்படுத்திடு.

வானத்தின் கதவுகள் திறக்கப்பட்டன
வளங்கள் மழையாய் பொழிய
வானவர்கள் வீடுகளை
வலம் வந்து அலங்கரிக்கட்டும்!

சுவனத்தின் கதவுகள் திறந்தன
நற்செயல்களுக்கான
பாதைகளை எளிதாக்கி விடு!

நோன்பின் வாடையால்
ரையானின் வாசல் சுகந்திக்கட்டும்
உம்மத்துக்களின் வரவுக்காய்க்
காத்திருக்கட்டும்!

நன்மை எனும் மலர்கள்
பூத்துக் குலுங்கும் வசந்தகாலம்
வாசல் திறந்து வந்தது

பொறுமையும் மனக்கட்டுப்பாடும்
இதயங்களைத் தூய்மைப்படுத்தட்டும்
புலனடக்கம் மனதைக் கட்டுப்படுத்தட்டும்!

பசி, தாகம் பொறுத்து
மனவலிமை இயல்பாய் ஏற்படட்டும்.

அஹ்லன் வஸஹ்லன்!

கவிஞர் செண்பகச்சோலையாள்

# குழந்தையும் நானும்



விண்மீன்களின்
எண்ணிக்கை கேட்டு
வியந்து பார்க்கும் குழந்தை
எண்ணிக்கையற்றது
விண்மீன்கள் என்கிறேன்
கணக்கே தெரியவில்லை உனக்கு
என்று கூறிவிட்டு
ஓடிவிடுகிறது குழந்தை
அழகான முட்டாள் பட்டத்தை
புன்னகையுடன் சுமக்கிறேன்
குழந்தைக்கு
விண்மீன்கள் புரியும் வரை

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# அவள்

அவள் அன்னக்கிளி
அந்தக் கன்னக் குழி
எனக்கு இல்லை கிலி
இருந்தும் ஆனேன் பலி.

பகலில் நிலாக்கள்
தெருவில் உலாக்கள்
இருண்ட பருதாக்கள்
இமையிரண்டில் வினாக்கள்.


இதழ்களுள் முத்துப்பல்
அதில் ஒரு தெத்துப்பல்
என்னை ஒத்துக் கொள்
அல்லது குத்திக் கொல்.

கூடிய மேகம் குழலாக
குறைந்த பாகம் இடையாக
மண்குடம் இரண்டு கலையாக
மலைத்து நின்றேன் சிலையாக.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# ஒருமைக்கண்



எழுமையும் தொடரும்
ஒருமைக்கண்
ஏற்றுத் திறந்திடுவோம்
கல்விக்கண்

சிந்தனைகளை ஒருமித்து
சந்ததிகளுக்கு எடுத்துச் செல்லும் கருவி
வசந்தங்களைத் தந்து
வாழ்க்கையை வளமாக்கும்
இந்த அருவி

பகுத்தாய்ந்து பண்போடு
வாழ்வது அறமே
எழுமையிலும் ஏற்றம்
தந்துயர்த்தும் இந்த மறமே

நித்திய ஞானமாய்
நிலத்தினிலே உறைந்திடும்
சத்தியம் கொண்டே
சபைதனிலே நிறைந்திடும்

முற்றும் பெறாது
முடிவும் இல்லாத
மாபெரும் சக்தி
அற்றம் இல்லாது
அவனியிலே
என்றுமே உறைந்திடும்
பேராற்றல்

பெற்ற கல்வியும்
பேரிறையாக நிலைத்திடும்
பிறவிகள் கடந்து
பெருங்குணத்துடன்
தழைத்திடும்தழைத்திடும்

கவிஞர் விஜயலக்ஷ்மி காளீதாசன், கோவை மாவட்டம்

# நாடினேன்! நான்கண்டுகொண்டேன்!

வாயும் வயிறுமாய் வந்தமர்ந்த தாயே!
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகும்!
உடலுழைப்பு மிகுந்திருந்த காலத்தில் நாங்கள்
திடகாத்திரமாய் வாழ்ந்தோம்! உணவே மருந்தாச்சு!
உடலுழைப்பு குறைந்ததனால் உடல்பருமன் கூடிடுதே!
உடந்தொடரும் பலநோய்கள்! மருந்தே உணவாச்சு!
நோய்நாடி நோய் முதல்நாடி அதுதணிக்கும்
வாய்நாடி மருத்துவம் பார்த்தது அக்காலம்!
நாடிபார்த்தே கண்டறிவேன் நோயின் வகைதனையே!
கண்ணால் பார்த்தும், கைகளால் தொட்டுணர்ந்தும்
எண்வகை ஆய்வுகளால் எடுத்துரைப்போம் நோய்வகையை!
ஆண்களுக்கு வலக்கரத்தில், பெண்களுக்கு இடக்கரத்தில்
மணிக்கட்டிற்கு ஒருஅங்குலம் தள்ளி பெருவிரற்பக்கமாய்
மூன்று விரல்களை நெல்லிடைப் பிரமாண தூரத்தில்
பொருத்தி, இலேசாக அழுத்தியும் தளர்த்தியும்
பார்த்திட ஆள்காட்டி விரலுணர்வது வாதம்!
நடுவிரலுணர்வது பித்தம், பௌத்திர விரலுணர்வது
கபம்! வாதநாடி ஒருமாத்திரை பித்தநாடி அரைமாத்திரை
கபநாடி கால்மாத்திரை இயல்பான அளவுகளாம்!
வாதம், பித்தம், கபம், வாதபித்தம்,
வாதகபம், பித்தவாதம், பித்தகபம், கபபித்தமென
வகைவகையாய் நோய்களுண்டு!அதற்கேற்ப மருந்துசெய்து
அளித்திடுவோம் நோய்தீர! மருத்துவ வசதிகள்
இல்லாத காலத்தில் ஆறேழு பெற்றெடுத்தோம்!
இல்லத்தில் சுகப்பிரசவம்! அறுவை சிகிச்சையில்
பிள்ளைகளை பெற்றெடுத்தல்! மக்கட்பேறு வேண்டி
பல்வகை மருத்துவங்கள்! காலமாற்றத்தைக் கண்முன்
காண்கின்றோம்! நன்மகவை ஈன்றெடுப்பை! நாடிகண்டு
நானுரைத்தேன்! தாயும்,சேயும் நீளாயுள் பெற்றிடுக!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

## இதற்குப்போயா?



நேற்றைய
உவகையையும்
வருத்தங்களையும்
கவலையையும்

இன்றைய நிஜங்கள்
இதற்குப்போயா
இத்தனை ஆர்ப்பாட்டம் என
கேலி செய்கின்றன

நாளைகளும்
இன்றைய நிதர்சனங்களைப் பார்த்து
இதைகேலிசெய்யும்

காரணங்களாய்
'அந்த கணத்தின் சூழ்நிலை'
'பெற்ற அனுபவம்'
'கிடைத்த மனப்பக்குவம்'

****

## சண்டை சண்டையாய்

இங்கேயே நின்றால் எப்படி?
போக வேண்டிய தூரத்துக்கு
அடுத்தகட்ட நகர்வு எப்போது?

இலக்கும் திட்டமிடலும்
என்னவாயிற்று? என
தொணதொணக்கும் மனதும்
நீ பாட்டுக்கு
அங்கே இங்கே என்று
பறந்து கொண்டும்

நானோ ஒரு
செயலாக்கத்துக்கே
நிறைய சவால்களால்
நொண்டியத்துக் கொண்டு
அப்படியே கஷ்டப்பட்டு முடித்தாலும்
அடுத்த வினாடியே
அப்புறம், நீ என விரட்டுவதால்
பதற்றமுமாய் என புத்தியும்

சண்டை சண்டையாய்
தனித்த பொழுதுகளில்.

கவிஞர் சந்திரராஜன், மானாமதுரை



அழகான நீ
அருகில் மழை
நமக்குள் ஒதுங்குகிறோம்
*
காற்றுக்குப் பதில்
என் மூச்சில்
உன் பேச்சு
*
தோட்டா துளைக்கும் நேரம்
உன்னைக் கண்டதும்
என்னுள் நுழைகிறது
*
மண்ணாய் நான்
உன்னுடன் சேர்ந்து
பொன்னாய் ஜொலிக்கிறேன்
*
காட்சி முடிந்தது
கனவு கலைந்தது
இன்னும் தெரிகிறாய்
*
நம் சந்திப்புகளை
நினைக்கிறேன்
அழகாகிறது மனம்
*
பிறை வளையலை
சேமிக்கிறேன்
இதய மாலை கட்டித்தர
*
சுவாசிக்க மறந்து
பேசுகிறோம் மணிக்கணக்கில்
பார்வையால்
*
இதழ்களைத் தேக்கி
இதயம் காத்திருக்கிறது
அழகான முத்திரைக்காக.
*
தாங்கும் ஆசையில் எங்கும் கன்னம்
முத்தம் விழுந்த வேளை
மறந்து போனது வேலை

கவிஞர் இளையவன் சிவா

பஞ்சதன்

மனிதனின் இனப்பெருக்கம் மட்டும்
கொண்டாடப்படுவதேன் ?
விலங்குகள் குட்டி போடுவதில்லையா
***

கழிப்பறை இல்லாத கிராமங்களில்
கட்சி கொடி மேடை
***

போன மாதம் கட்டிய
புதிய நூலகம்
பல நூறு வருடம் பழமையானது
***

அரசியலில் இலக்கண பிழை
எங்கள் மாநிலமே மாவட்டமே என்று
மனிதரை புகழ்கின்றனர்
***

ஒரு கெட்ட வார்த்தை
நான்
என்பது
***

நிரந்தரமான
தற்காலிக தீர்வு
தேநீர்
***

நொடி பொழுதில்
நகர்கிறது
நொடி முள்
***



திருக்குறள் ஹைக்கூ
இதோ
செவிச் செல்லம்
***

கண்ணை
மூடிக்கொண்டு பாருங்கள்
எல்லை அற்ற பிரபஞ்சம் தெரியும்
***

நீ நினைத்ததை
மௌனம் மட்டுமே
சாதிக்கும்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன்

விமானம் கீழே இறங்க ஆரம்பித்த போது ''வலம்புரி மாதவனே நான் சொல்வதைக் கவனமாக கேள்.'' என்றான் இடுப்பில் துப்பாக்கியை அழுத்தியவாறு.

''என்ன சொன்னாலும் கேட்கிறேன்.இந்தத் துப்பாக்கியை கொஞ்சம் நகர்த்தி வைக்கிறாயா?''

''நான் துப்பாக்கியை நகர்த்தியதும், என்னைத் தள்ளி விட்டு தப்பித்துக் கொள்ளவா? இனி அது நடக்காது. ரயிலில் நடந்த அசம்பாவிதம் இனியும் நடக்கக் கூடாது.''

''சரி சொல்லு.'' ''நாம் இறங்கியதும், ஏறக் குறைய கைமேல்கை போட்டுக் கொண்டு தான் நடப்போம். அப்போதும் துப்பாக்கி உன் இடுப்பை குறி பார்த்துக் கொண்டு தானிருக்கும். வீணாக டென்சன் அடைந்தால் பரலோக ராஜ்ஜியம் நிச்சயம்.''

''அப்படியெல்லாம் நடக்காது.''

''நல்ல பையனா நடந்தால் பொழைச்சுக்க சான்ஸ் இருக்கு. நீ பெட்டியை எடுத்துக் கொண்டதும் வெளியே உனக்காக காவல் இருப்பவர்களிடம் நீங்கள் வீட்டுக்கு போங்கள், நான் சாயங்காலக் கூட்டத்திற்கு நேரடியாக கலந்து கொள்ள வந்து விடுவேன்.'' என்று சொல்லி அவர்களை வழியனுப்பி வைக்க வேண்டும்.

''உன் கார் டிரைவரிடம் சாவியை வாங்கிக் கொண்டு அவனையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.உனக்கு கார் நல்லா ஓட்டத் தெரியும் தானே?''

''ஆமாம்.'' என்றார் மந்திரி. அதிகமாக பொங்கிய வியர்வையைத் துடைத்துக் கொண்டு.

''மற்றவைகளை நாம் காரில் பயணிக்கும் போது சொல்கிறேன்.'' என்ற போது ''என்னை அழைப்பதற்கு அரசாங்க கார் வரும். அதை நான் ஓட்டுவது அவ்வளவு நன்றாக இருக்காது.'' என்றார்மந்திரி.

"மந்திரி என்ற மமதை போகவில்லை பாரேன். இன்றைக்கொரு நாளும் அந்தக் கார் டிரைவருக்கு விடுமுறை கொடுத்து விட்டு வா. அவன் இன்று மட்டுமேனும்

சந்தோசமாக இருக்கட்டும். ஏனென்றால் நீசாகப் போகிற நாளல்லவா? ஏன் பயமாக இருக்கிறதா? என் தங்கை கவுசல்யா இறந்து போனதற்காக மிகவும் சந்தோசப்பட்டாயாமே...''?

''எனக்கு எப்படித் தெரியும் என்கிறாயா? என் பாசமலர் என்று உயிர் துறந்ததோ அன்றிலிருந்து உன்னைப் பற்றி..தெரிந்து கொள்ள ஆரம்பித்தேன். உன்னை உலகத்தை விட்டு அனுப்புவதற்கு வழிசெய்ய, வழி தேட ஆரம்பித்தேன்.''

"விமானம் இறங்கப் போகிறது. வீணாக ஏதாவது எடக்குமடக்காக செய்ய ஆரம்பித்தாயானால் ஒன்று கிடக்க ஒன்றாகிவிடும். என்னைப் பிடித்துக் கொடுக்க நீ எந்த முயற்சி செய்தாலும் அடுத்த நிமிடமே உனக்கு சாவுமணி அடித்து விடும் இது நிச்சயம். . இறங்கி நடந்து போகும் போது கூட நாம் ஒருவருக்கொருவர் கைமேல்கை போட்டுக் கொண்டு தான் நடப்போம்.''

''என் குர்தாவின் ஒருபுறம் கைத்துப்பாக்கியோடு உன் இடுப்பில் உராய்ந்து கொண்டேதானிருக்கும் புரிகிறதா?'' என்று சொல்லும் போது கைக்குட்டை எடுத்துக்கொள்ள மந்திரி பையில் கை விட்டார்.

''இதோ! புதுடவல்... முகம் துடைத்துக் கொள். அதிகமாக வேர்க்கிறது.'' என்று இடது கையால் டவலைக் கொடுத்தான். முகம் துடைத்துக் கொண்ட வலம்புரி மாதவன் ''பழனி இறந்தவள் கதையை மறந்துவிட்டு புதுவாழ்க்கைத் தொடங்குவதற்கு உனக்கு பத்துபதினைந்து ஏக்கரா கரும்பு சாகுபடிநிலமும் ஒருபங்களாவும் ஒருபுத்தம் புதிய குவாலிஸ் காரும் தர்றேன்.''

''கொஞ்சம் யோசித்துப்பார். என்னைக் கொன்றால் உன்னை சிறையில் போடுவார்கள். ஆயுசு காலம் முழுவதும் நீ சிறையிலே கிடந்து சாகணும்.''

''சரிதான். நான் ஏத்துக் கொள்கிறேன். தப்பு நடந்து போய் உன் தங்கை.... அவள் பேரென்ன... அ...ஆங்...கவுசல்யா இறந்து போய்விட்டது.... அதற்காக நீ என்னைக் கொலை செய்து வீணாக நீயும் மாட்டிக் கொண்டு.... என்ன சொல்கிறாய்.'' என்றார் மிடுக்காக.

''பாத்தியா... இது தானே வேண்டாம் என்பது சாத்தான் வேதம் ஓதிய கதையாக இருக்கிறது.... எனக்கு நீ நிலமும் பங்களாவும் காரும் வாங்கித்தந்து சுகமாக

இருக்க விடுவாய்...யார் காது மேல காது குத்துகிறாய்.'' விமானம்இறங்கிவிட்டது.

விமானத்தில் படியில் இறங்கும் போதும் விமானநிலையத்திற்கு வரும் பஸ்ஸிலும் உள்ளே வந்த பிறகும் இணை பிரியாத காதலர்கள் போல மந்திரி வலம்புரி மாதவனை ஒட்டிக் கொண்டே வந்தான் பழனி.

மந்திரியின் கைப்பையையும் பழனி தோளில் போட்டுக்கொள்ள வெளியே வந்தபோது கூடியிருந்தவர்களிடம் "நான் நேரே விருந்தினர் மாளிகைக்கு வருகிறேன். என் நண்பனுக்கு ஏதோ பிரச்சனையாம். அவருடைய மனைவியோடு வேகமாக போய்க் கொண்டிருக்கிறேன். என்று சொன்ன மந்திரி அரசாங்ககாரில் ஏறி ''டிரைவர் நீயும் வீட்டுக்குப் போய் விட்டு விருந்தினர் மாளிகைக்கு வந்து விடு.'' என்று 'டிரைவரை அனுப்பி விட்டு காரை ஓட்டினார்.

''எங்கே போகிறோம். சொல்லு பழனி.'' ''எமலோகத்திற்கு... சும்மா வண்டியை ஓட்டிக் கொண்டிரு.... நான் வலது இடது சொல்லிக் கொண்டே வருகிறேன்.''

''நான் சொன்னதை யோசித்துப் பார்த்தாயா?'' ''வாய்ப்பில்லை. என் தங்கை கவுசல்யாவின் ஆன்மா சாந்தியடைய வேண்டியது தான் முக்கியம்.''

''அதற்கு வேண்டுமானால் ஆயிரம் கோயில்களில் அன்னதானம் ஏற்பாடு செய்துவிடலாம். அதுவும் அரசாங்க செலவிலேயே ஏற்பாடு செய்து தருகிறேன்.'' ''மந்திரி, அவள் உயிரைப்பலியாகக் கேட்கிறாளே... நீ இறந்தால் தான் அவள் ஆன்மா சாந்தியடையும் என்கிறாள்.''

''பழனி, வேண்டுமெனில் என்னிடம் இருப்பதில் பாதிச் சொத்தை தந்துவிடுகிறேன். இந்தக் கொலை...சாவு மணியெல்லாம் கொஞ்சம் மாற்றுகிறாயா?'', ''வாய்ப்பேயில்லை.... ஆமாம் உனக்கு நீச்சல் தெரியுமா?'', "இல்லேப்பா...'"

மந்திரி காரை நிறுத்தியதும் ''என் துப்பாக்கிக்கிக்கூட வேலை கொடுக்க வேண்டிய தேவையில்லாமல் போய்விட்டது.'' என்று கீழே இறங்கினான். மந்திரி வலம்புரி மாதவனும் இறங்கிக் கொண்டு ''என்னசொல்கிறாய்?'' என்று கேட்டார்.

''இப்படி வா.'' என்று நதியின் கரையை நோக்கி நடந்தான்.


கவிஞர் இராஜகைநிலவன்

"நான் வரவில்லை.... நதியில் வெள்ளம் கரை புரண்டோடுகிறது." "வாப்பா.... வா." என்று துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்தான்.பயந்து போன மந்திரி மெதுவாக பழனியின் அருகில் வந்தார்.

"என்ன வலம்புரி மாதவனே.... இவ்வளவு நாளும் செய்த பாவத்திற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்.போகிற இடத்திலாவது சொர்க்கம் கிடைக்கும்." "நீ என்ன செய்யப் போகிறாய் என்று புரிந்தும் புரியாமலும் இருக்கிறது. பழனி கடைசியாகச் சொல்கிறேன். நான் நாளைக்கே மந்திரி பதவியை ராஜினாமா செய்துவிட்டு என் சொத்துக்கள் அனைத்தையும் உனக்கு எழுதித் தந்து விடுகிறேன். எனக்கு உயிர்ப் பிச்சை கொடு." என்றார் மாதவன்.

"பார்... உயிர்ப் பயம் எப்படி இருக்கிறது? இறந்து போன என் தங்கை கயிற்றில் தொங்கும்போது எவ்வளவு துடித்திருப்பாள். சரி... நதிக்குள் குதித்து விடு." என்றான் துப்பாக்கியை எடுத்து மந்திரியின் நெற்றியில் குறிபார்த்துக் கொண்டு., "வேண்டாம் பழனி. நான் இவ்வளவு சொன்ன பிறகும் கேட்க மறுக்கிறாயே." என்று குனிந்த மாதவன் வேகமாக பழனியின் காலை பிடித்து இழுக்க இருவரும் எதிர்பாராமல் நதிக்குள் விழுந்து விட, மந்திரியின் கைகள் பழனியின் கால்களை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு மேலே வர முயற்சித்தார் மாதவன்.

வேகமாக பழனி உதைத்து விட மந்திரி கைகளை உதறிக் கொண்டு நீந்த முடியாமல் திணறிக் கொண்டு தத்தளிக்க, பழனி எதிர்க்கரையை நோக்கி வேகமாக நீந்திக் கொண்டிருந்தான். செக்யூரிட்டி வண்டி சப்தமெழுப்பிக் கொண்டு வேகமாக மந்திரியின் காரை வளைத்துக் கொள்கையில் ஏ.கே.47 ஏந்திய அத்தனை காவலர்களும் உள்ளே யாரையும் காணாது அருகிலிருந்த தடயங்களைத் தேடிக் கொண்டிருந்தனர். மந்திரி வலம்புரி மாதவன் மூச்சுத் திணறி நதி நீரின் ஓட்டத்தோடு வேகமாக அமுங்கிப் போக , கரையேறிக் கொண்டிருந்தான் பழனி.



முற்றும்

கவிஞர் இராஜகைநிலவன்

# ச.வே.சுப்ரமணியன்

கட்டுரை

## பிறப்பு, கல்வி



ச.வே.சுப்ரமணியன் திருநெல்வேலி மாவட்டம் வீரகேரளம்புதூரில் சு. சண்முகவேலாயுதம், இராமலக்குமி இணையருக்கு டிசம்பர் 31, 1929-ல் பிறந்தார். விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள புனித இருதய மேல்நிலைத் தொடக்கப் பள்ளியிலும், அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியிலும் கல்வி பயின்றார்.

இடைநிலைக் கல்வியை திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரியில் பயின்று, 1950 -1953-ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று இளங்கலை (சிறப்பு) பட்டம் பெற்றார். முனைவர் பட்டத்தைக் கேரளப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து பெற்றார்.

## தனிவாழ்க்கை

1953-1956 காலப்பகுதியில் தூத்துக்குடி வ.உ.சி.கல்லூரியில் தமிழ் பயிற்றுநராகப் பணியைத் தொடங்கி, பின்னர் பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியிலும், திருவனந்தபுரம் பல்கலைக்கழகக் கல்லூரியிலும் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின்னர் கேரளப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத்தலைவராகப் பணியாற்றினார்.

## உலகத்தமிழ்க்கல்வி இயக்கம்

## இலக்கிய வாழ்க்கை

சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இயக்குநராகப் பணிபுரிந்த ச.வே.சுப்ரமணியன் கம்பராமாயணம், சிலப்பதிகாரம் பற்றிய ஆய்வு நூல்களையும் இலக்கண ஆய்வுகளையும் வெளியிட்டுள்ளார். தமிழ் நிகண்டுகள் என்னும் இவருடைய நூல் தமிழ்வளர்ச்சித்துறை விருது பெற்றது. வீரமாமுனிவரின் தொன்னூல் விளக்கம் நூலை பதிப்பித்துள்ளார்.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

# ச.வே.சுப்ரமணியன்

கட்டுரை

**உலகத்தமிழ்க்கல்வி இயக்கம் - இலக்கிய வாழ்க்கை**

நெல்லை மாவட்டம், பாபநாசத்தில் 1969-ல் திருவள்ளுவர் கல்லூரியை உருவாக்கி குன்றக்குடி ஆதீன நிர்வாகத்திற்கு அளித்தார். இவருடைய வழிகாட்டலில் 44 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். தமிழில் 165 நூல்களும் ஆங்கிலத்தில் 9 நூல்களும் மலையாளத்தில் ஒரு நூலும் எழுதியுள்ளார். நெல்லை அருகே பல ஏக்கர் நிலம் வாங்கி அங்கே தமிழூர் என்னும் சிறுநகரை உருவாக்கினார். அங்கே உலகத்தமிழ் கல்வி இயக்கம் என்னும் அமைப்பை நிறுவி 25000 நூல்கள் கொண்ட மூன்று நூலகங்களையும் உருவாக்கினார். தமிழ்மாணவர்கள் தங்கி ஆய்வுசெய்வதற்குரிய வசதிகளை ஏற்படுத்தினார். வேளாண்மையில் ஈடுபாடுகொண்ட ச.வே.சுப்ரமணியம் தன் நிலத்தில் வேளாண்மைப் பட்டையப்படிப்பு வகுப்புகளையும் சிலகாலம் நடத்தினார்.

**விருதுகள்**

- செந்தமிழ்ச் செம்மல் விருது
- இராமநாதபுரம் மன்னர் பாஸ்கரசேதுபதி விருது
- சாகித்திய அகாதெமி வழங்கிய பாஷா சம்மான் விருது
- தமிழாகரர் விருது
- சைவநன்மணி விருது
- மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை விருது
- ஔவைத்தமிழ் அருளாளர் விருது
- தமிழியக்கச் செம்மல் விருது
- ராஜா அண்ணாமலைச் செட்டியார் அறக்கட்டளை விருது
- தொல்காப்பியச் செம்மல் விருது
- சென்னை கம்பன் விருது
- தமிழக அரசின் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது
- தருமபுர ஆதீனம் செந்தமிழ்க் கலாநிதி விருது

திரு அ.வில்சன், இதழாசிரியர்

# ச.வே.சுப்ரமணியன்

## கட்டுரை

### இலக்கிய இடம்

ச.வே.சுப்ரமணியம் தீவிரமான தமிழ்ப்பற்றில் இருந்து உருவாகும் வழிபாட்டுணர்வுடன் ஆய்வுகளை மேற்கொண்டவர். இலக்கணநூல்களின் பதிப்பு மற்றும் உரையே ச.வே.சுப்ரமணியனின் முதன்மைப் பங்களிப்பு. விரிவான மூலநூல், பாடவேறுபாடு ஒப்புநோக்குதலும் செம்மையாக்கமும் கொண்ட நூல்கள் அவை. ச.வே.சுப்ரமணியன் தமிழ் நூல்கள் மீதான ஆய்வுசார்ந்த ரசனைவாசிப்பு முறை ஒன்றை உருவாக்கியவர். கம்பராமாயணம், சிலப்பதிகாரம் ஆகியவற்றில் இருந்து வரலாறு, வாழ்க்கை சார்ந்த நுட்பங்களை கண்டடையும் வாசிப்பு அது. பேராசிரியராக இரண்டு தலைமுறை மாணவர்களை தமிழறிஞர்களாக உருவாக்கியவர்.

### நூல்கள்

▼ இலக்கிய நினைவுகள் (1964) ▼ சிலம்பின் சில பரல்கள் (1972)
▼ இலக்கியக் கனவுகள் (1972) ▼ மாந்தர் சிறப்பு (1974)
▼ ஒன்று நன்று (1976) ▼ அடியார்க்கு நல்லார் உரைத்திறன் (1976)
▼ இலக்கிய உணர்வுகள் (1978) ▼ கம்பன் கற்பனை (1978)
▼ காப்பியப் புனைதிறன் (1979) ▼ கம்பனும் உலகியல் அறிவும் (1981)
▼ கம்பன் இலக்கிய உத்திகள் (1982) ▼ கம்பன் கவித்திறன் (2004)
▼ இளங்கோவின் இலக்கிய உத்திகள் (1984)
▼ இலக்கிய வகையும் வடிவும் (1984) ▼ தமிழ் இலக்கிய வரலாறு (1999)
▼ சிலப்பதிகாரம் மூலம் (2001) ▼ சிலப்பதிகாரம் இசைப்பாடல்கள் (2001)
▼ சிலம்பும் சிந்தாமணியும் (1977) ▼ திராவிட மொழி இலக்கியங்கள் (1984)
▼ இளங்கோவும் கம்பனும் (1986) ▼ தொல்காப்பியம் திருக்குறள் சிலப்பதிகாரம் (1998) ▼ தமிழில் விடுகதைகள் (1975) ▼ தமிழில் விடுகதைக் களஞ்சியம் (2003) ▼ காந்தி கண்ட மனிதன் (1969) ▼ பாரதியார் வாழ்க்கைக் கொள்கைகள் (1982) ▼ நல்வாழ்க்கை (1992) ▼ மனிதம் (1995) ▼ மனமும் உயிரும் (1996) ▼ உடல் உள்ளம் உயிர் (2004) ▼ தமிழர் வாழ்வில் தாவரம் (1993) ▼ கூவநூல் (1980) ▼ சிலப்பதிகாரம் தெளிவுரை (1998) ▼ சிலப்பதிகாரம் மங்கலவாழ்த்துப் பாடல் (1993)
▼ தொல்காப்பியம் தெளிவுரை (1998)

திரு அ.வில்சன், இதழாசிரியர்

நூல்கள்

- சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை (2001)
- திருக்குறள் நயவுரை (2001)
- திருமுருகாற்றுப்படை தெளிவுரை (2002)
- சிலப்பதிகாரம் குன்றக்குரவை உரை (2002)
- கானல்வரி உரை (2002)
- பத்துப்பாட்டு உரை (2002)
- இலக்கணத்தொகை எழுத்து (1967)
- இலக்கணத்தொகை சொல் (1970)
- இலக்கணத்தொகை யாப்பு,பாட்டியல் (1978)
- வீரசோழியம் குறிப்புரையுடன் (1977)
- தொன்னூல் விளக்கம் குறிப்புரையுடன் (1978)
- குவலயானந்தம் சந்திரலோகம் (1979)
- பிரபந்த தீபம் (1980)
- தொல்காப்பியப் பதிப்புகள் (1992)
- மொழிக்கட்டுரைகள் (1974)
- சங்க இலக்கியம் (2006)
- மெய்யப்பன் தமிழகராதி (2006)
- தமிழ் இலக்கண நூல்கள் (2007)
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் (2007)
- பன்னிரு திருமுறைகள் (2007)
- Descriptive Grammar of Chilappathikaram (1975)
- Grammar of Akananuru (1972)
- Studies in Tamil Language and Literature (1973)
- Studies in Tamilology (1982)
- Tolkappiyam in English (2004)
- சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் (மலையாளம்) (1966)

மறைவு

ஒரு விபத்துக்குப் பின் சிலகாலம் நோயுற்றிருந்த ச.வே.சுப்ரமணியன் ஜனவரி 12, 2017-ல் மறைந்தார்.

நன்றி
https://tamil.wiki/

நாளை

# நமதே

## கிழிந்த புத்தகத்தில் கூட
## நீ உயர்ந்து வாழ ஒரு
## சில வரிகள் இருக்கும்
## ஒரு முறையேனும்
## படித்துப் பார்

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே　　　　முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு　　அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு　　சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa　www.aagaramuthala.com　aagaramuthala@gmail.com